**சுருக்கம்**

வேளாண்மை–உழவர் நலத்துறை – தோட்டக்கலைத் துறை – அறிவிப்புகள் 2021–22 – "பனை மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் "பனை விதைகளை 100% மானியத்தில் விவசாயிகளுக்கும், பஞ்சாயத்திற்கும் விநியோகிக்க ரூ.1.00 கோடி நிதி ஒப்பளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை–உழவர் நலத் (தோ.க1.2) துறை**

**அ.ஆ (நிலை) எண் 232**

**நாள் 07.12.2021**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ வருடம், கார்த்திகை 21**

**படிக்கப்பட்டது:**

வேளாண்மை இயக்குநரின் கடிதம் எண்.எபதொ/85573/2021, நாள் 27.9.2021.

-----

**ஆணை:**

14.8.2021 அன்று வேளாண்மை–உழவர் நலத் துறையின் நிதிநிலை அறிக்கையின் போது மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை மேற்கொண்டுள்ளார்கள்:–

"பனை மேம்பாட்டு இயக்கம் 3 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்"

**பனை மேம்பாட்டு இயக்கம்**

- பனைமரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நடப்பாண்டில் 30 மாவட்டங்களில், 76 இலட்சம் பனை விதைகளை முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் (ரூ.1.00 கோடி).
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பனை மரம் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் (ரூ.50 இலட்சம்).
- பனை வெல்லம் உற்பத்தி தொடர்பான நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கு விவசாயிகளுக்கு உரிய பயிற்சியும், பனங்கருப்பட்டி காய்ச்சல் நவீன இயந்திரம் கொள்முதல் செய்திட மானியமும் வழங்கப்படும் (ரூ.50 இலட்சம்).

2. மேற்சொன்ன அறிவிப்பை செயல்படுத்தும் பொருட்டு பார்வையில் காணும் கடிதத்தில், "பனை விதைகளை 100% மானியத்தில் விவசாயிகளுக்கும், பஞ்சாயத்திற்கும் விநியோகிக்க ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்க வேண்டி" வேளாண்மை இயக்குநர் தனது கருத்துருவினை அனுப்பியுள்ளார். மேலும், பனை சாகுபடியின் முக்கியத்துவம், பனையின் பொருளாதார முக்கியத்துவம், பனை மேம்பாட்டிற்கான குறிக்கோள், பனை சாகுபடி மேம்பாட்டிற்கான உத்திகள் மற்றும் திட்ட செயலாக்கத்தினை இணைப்பில் காணலாம்.

3. வேளாண்மை இயக்குநர் தனது கருத்துருவில், பனை விதைகளின் விலை (போக்குவரத்து கட்டணம் உட்பட) மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடும். சராசரியாக ஒரு பனை விதையின் விலை போக்குவரத்துச் செலவினம் உட்பட ரூ.3.80 ஆக உள்ளது. 25,33,000 பனை விதைகள் வாங்குவதற்கு ரூ.0.96254 கோடி தேவைப்படுகிறது. பனை விதைகள் வாங்குவதற்கான செலவினம் போக இதர மற்றும் சில்லறை செலவினம் மேற்கொள்ள ரூ.0.03746 கோடி தேவைப்படுவதால் வேளாண்மை இயக்குநர் மேற்சொன்ன 1.00 கோடி ரூபாயினை பெற்று வழங்க கோரியுள்ளார்.

| | |
|---|---|
| 25,33,000 பனை விதைகளுக்கான விலை<br>((ஒரு பனை விதையின் விலை ரூ.3.80)<br>(3.80 X 25,33,000 = ரூ.96,25,400)) | ரூ.96,25,400 |
| **இதர மற்றும் சில்லரைச் செலவினம்** | ரூ.3,74,600 |
| **மொத்தம்** | ரூ.1,00,00,000 |

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, "பனை விதைகளை 100% மானியத்தில் விவசாயிகளுக்கும் பஞ்சாயத்திற்கும் விநியோகிக்க ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2401 00 - பயிர் வளர்ப்பு - 108 - வணிகப் பயிர்கள் மாநிலச் செலவினங்கள் - BA பனை மேம்பாட்டு இயக்கம் - 311 மானியங்கள் - 01 - தனித்திட்ட மானியம் (த.தொ.கு - 2401 00 108 BA 31101) - ரூ.1.00 கோடி

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த

நிதியொதுக்கத்தில் மறுநிதியொதுக்கத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்படும்.

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | கணக்கு தலைப்பு | திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீடு 2021-2022 | கூடுதல் நிதி (+ or –) | மறு நிதியொதுக்கத்திற்கு பின்னர் கணக்கு தலைப்பில் உள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1. | 2401 00 108 BA 32401 | 10000 | (-)10000 | 0 |
| | 2401 00 108 BA 31101 | 0 | (+)10000 | 10000 |
| | நிகர விளைவு | 10000 | | 10000 |

அத்தகைய நிதியொக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவினை அனுப்பும் போது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து நிதித் (வேளாண்மை (ம) உ.ந)த் துறைக்கு அனுப்புமாறு வேளாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேற்சொன்ன திட்டத்தை செயல்படுத்த மேலே பத்தி – 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், ரூ.1.00 கோடி நிதியினை வேளாண்மை இயக்குநர் பெற்று, தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையின் துணைத்தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு வழங்கிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண் 53956/நிதி (வே.உ.ந)/2021, நாள் 06.12.2021, மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1076 (ஆயிரத்து எழுபத்து ஆறு) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5.
துணைத்தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை, சென்னை.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை.5
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை-18

மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18

உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை –9.

சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை–உழவர் நலத் துறை, சென்னை – 9.

நிதித் (வே–உ.ந/வ.செ.பொ.1) துறை, சென்னை– 9.

வேளாண்மை–உழவர் நலத் (அநமு3 / வ மற்றும் தி) துறை, சென்னை.9

உதவி நிரலர், வேளாண்மை–உழவர் நலத்துறை, சென்னை – 9

சம்பந்தப்பட்ட கோப்பு எண்.18151/தோ.க.1.2/2021

இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7.12.21

பிரிவு அலுவலர்

7.12.21

3/8

## இணைப்பு

**[அரசாணை (நிலை) எண் 232, வேளாண்மை–உழவர் நலத் (தோ.க.1–2) துறை, நாள் 07.12.2021]**

### பனை சாகுபடியின் முக்கியத்துவம்:–

காதி மற்றும் கிராம தொழிற்சாலை வாரிய 2019–20 புள்ளியியல் கணக்கின்படி தமிழ்நாட்டில் 5 கோடி பனை மரங்கள் உள்ளன. ஏறத்தாழ 3 லட்சம் விவசாயக் குடும்பங்கள் பனைமரத்தின் வாழ்வாதாரத்தை நம்பி வாழ்கின்றனர். இவர்கள் மரத்தின் இலை, நார், மற்றும் இதர பகுதிகளைக் கொண்டு கூடை, பாய், கயிறு, துடைப்பம் போன்ற பொருட்களைத் தயார் செய்கின்றனர்.

### பனையின் பொருளாதார முக்கியத்துவம்:–

பனைமர சாகுபடியின் வளர்ச்சி, நீர்ப்பாசனம் மற்றும் பராமரிப்பிற்கு அதிக செலவினம் தேவையில்லை. ஆண்டிற்கு ஒரு பனை மரத்திலிருந்து பின்வருமாறு பொருளாதார மகசூல் கிடைக்கப் பெறுகிறது:–

| | | |
|---|---|---|
| (1) | பதநீர் | 150 லிட்டர் |
| (2) | வெல்லம் | 20–25 கிலோ |
| (3) | பனை சர்க்கரை | 16 கிலோ |
| (4) | முதிர்ச்சி இலைகள் | 10 கிலோ |
| (5) | கயிறு | 11 கிலோ |
| (6) | நார் | 16–20 கிலோ |
| (7) | விறகு | 10 கிலோ |

மேலும் இவை கிராமத் தொழிலாளர்களுக்கும், கைவினை கலைஞர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்குகிறது. பனை தொழில் மூலம் ஒவ்வொரு வருடமும் பல்வேறு நாடுகளுக்கு பனை பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலாவணி வருவாய்க்கு பங்களித்து வருகிறது.

### தமிழ்நாட்டில் பனை மேம்பாட்டிற்கான குறிக்கோள்:–

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கருத்துப்படி நாட்டில் உள்ள 10 கோடி பனைமரங்களில் அதிகப்படியாக தமிழ்நாட்டில் மட்டும் 5.00 கோடி பனை மரங்கள் உள்ளன. பனை சாகுபடியினை மேம்படுத்துவதற்கான முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:–

- மழை நீரினை வருவித்து சேமித்து வைத்தல்.
- நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துதல்.

- அதிகபடியான மழை மற்றும் வெள்ள காலங்களில் ஏரி வாய்க்கால்களின் வரப்பினை பாதுகாத்தல்.
- இயற்கை இடர்பாடான புயல், சுனாமி போன்ற பேரழிவுகளினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல்.
- உள்ளூர் கிராம தொழிலாளர்களுக்கு/ கைவினை கலைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
- பல்வேறு மதிப்புக் கூட்டுப் பொருட்கள் மூலம் அந்நிய செலாவணி வருவாயை பெருக்குதல்.

<u>பனை சாகுபடி மேம்பாட்டிற்கான உத்திகள்:-</u>

பனையானது தமிழ்நாட்டின் தென்பகுயில் அதிகம் காணப்படுவதுடன் அதிகப்படியான சிறு மற்றும் குறு விவசாயிகள் இம்மரத்தை தங்கள் வாழ்வாதாரத்திற்காக சார்ந்துள்ளனர். பின்வரும் உத்திகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பனை சாகுபடியின் மேம்பாடு திட்டமிடப்படுகிறது:-

- பனை சாகுபடிக்கான இடத்தேர்வு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களால் மேற்கொள்ளப்படும்.
- சுயஉதவிக் குழுக்கள், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு, விவசாய ஆர்வலர் குழுக்கள், விவசாய உற்பத்தி குழுக்கள் ஆகியோர் பனைசாகுபடியில் ஈடுபடுவர். பனை விதையை ஏரிகளின் வரப்பு, வாய்க்கால் வரப்பு, சாலை ஓரங்கள், அரசு புறம்போக்குப் பகுதிகளில் நடவு செய்ய கிராம பஞ்சாயத்துகளின் பணிகள் பயன்படுத்தப்படும்.

<u>திட்ட செயலாக்கம்:-</u>

<u>பனை விதை கொள்முதல், விநியோகம் மற்றும் விதைப்பிற்கான வழிமுறைகள்:-</u>

- பனை விதைகள் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையினால் கொள்முதல் செய்யப்பட்டு மாவட்டங்களின் பகுதிகளுக்கு செயலாக்கத் திட்டம் மற்றும் இலக்கின்படி விநியோகம் செய்யப்படும்.
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 50 விதை வழங்கப்படும். உள்ளூர் தேவைக்கேற்ப கிராமப் பஞ்சாயத்துகளுக்கு பனை விதைகள் விநியோகிக்கப்படும். விதைகள் இலவசமாக விநியோகிக்கப்படும்.
- இரண்டு விதைக் குழிகளுக்கு இடையில் 3 மீட்டர் இடைவெளி விட்டு பொருத்தமான ஈரப்பதத்துடன் பனை விதைகளை நேரடியாகக் குழிகளில் விதைக்க வேண்டும். விதைப்பு ஆழமானது மண்ணின் தன்மைக்கேற்ப 30-40 செ.மீ இருக்க வேண்டும். நிர்வாக பின்செய் நடிவடிக்கைக்கு சுற்று வட்டப்பாத்தியின் வட்டம் (ரேடியஸ்) 10 செ.மீ இருக்குமாறு அமைக்க வேண்டும்.
- குழி தோண்டுதல் மற்றும் பனை விதை விதைப்பு 100 நாள் வேலை உறுதி அளிப்பு திட்ட பணியாளர்களால் (MGNREGS) ஊரக வளர்ச்சித் துறையின்

மேற்பார்வையில் செயல்படுத்த வேண்டும். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர்கள் ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து தக்க அறிவுரைகள் வழங்கி பனை விதைப்பினை மேற்கொள்ள மாவட்ட வேளாண் இணை இயக்குநருடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

- வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பதிவேடு ஒன்றைப் பராமரிக்க வேண்டும். அப்பதிவேட்டில் விவசாயியின் விவரங்கள், பனை விதை வழங்கப்பட்ட பஞ்சாயத்தின் பெயர், சர்வே எண் விவரங்கள் ஆகியவை பதியப்பட வேண்டும். சர்வே எண் விபரங்களுடன் இணைய வழி பதிவிட வேண்டும்.
- வருடத்திற்கு இருமுறை (ஆறுமாத இடைவெளியில்) மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட பனை சாகுபடி இருப்பு விபரம் உதவி வேளாண்மை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் வாயிலாக வேளாண்மை உதவி இயக்குநருக்கு தெரிவிக்க வேண்டும். துணை வேளாண்மை இயக்குநர் (மாநிலம்) அவர்கள் விதை முளைப்பிற்கு பின் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.
- கட்டுப்பாடான நிலையில் விதையின் முளைப்பு சதவீதம் 40–50% வரை இருக்கும். உண்மையான முளைப்பு சதம் மண் மற்றும் காலநிலையினைப் பொறுத்து கூடவோ இறங்கவோ செய்யலாம்.
- காலம் தவறுமானால் சரியான விநியோகம் மற்றும் விதைப்பு மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரின் தலைமையில் ஒரு குழு மாவட்டத்தில் ஏற்படுத்தலாம். இக்குழுவில் வேளாண்மை இணை இயக்குநர், உதவி இயக்குநர், பஞ்சாயத்து, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை இயக்குநர் இடம் வகிப்பர்,
- இலக்கின்படி விதையினை விதைப்பு செய்ய மாவட்ட ஆட்சியர் மற்றும் வோண்மை இணை இயக்குநர் செயல் திட்டம் தயாரிப்பர். விவசாயிகள் இத்திட்டத்தில் பெருமளவில் பங்கேற்க விளம்பரம் செய்யப்படும்.
- வேளாண்மை இணை இயக்குநர் இத்திட்டத்தின் விளைவுகளை ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கு ஆய்விடவேண்டும்.
- இத்திட்டத்தில் மாவட்டத்திலுள்ள காதி மற்றும் கிராம தொழிற்சாலை வாரியத்தின் உதவி இயக்குநர்களின் பணிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.
- பனை மரம் வெட்டுதலைத் தவிர்க்கவும், செங்கற் சூளையில் பயன்படுத்துவதை தவிர்க்கவும் அரசு உரிய உத்தரவுகள் பிறப்பிக்கும். தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் பனை மரத்தை வெட்ட மாவட்ட ஆட்சியரின் அனுமதி கட்டாயமாக்கப்படும். இதற்கு மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்ட அலுவலர்/ உதவி மாவட்ட ஆட்சியர், சார் மாவட்ட ஆட்சியர், வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் காதி மற்றும் கிராம தொழிற்சாலை வாரியத்தின் உதவி இயக்குநர் ஆகியோருடன் கூடிய ஒரு குழு அமைக்கப்படும். மாவட்ட ஆட்சியர் வேறு உறுப்பினரையும் இக்குழுவுடன் தேவைக்கேற்ப சேர்த்துக் கொள்ளலாம்.

- பனைமர சாகுபடி புதுப்பித்தல் ஒரு நீண்ட காலத்திட்டம். விவசாயிகள் பனை மரத்தை வளர்த்துப் பராமரிப்பது ஊக்குவிக்கப்பட வேண்டும். பனை பொருட்களை முழுமையாக பயன்படுத்த பொதுமக்களுக்கு விபரம் தெரிவிக்கப்பட வேண்டும். ஊரக பனைப் பொருட்கள் தொழிலாளரின் வாழ்வின் தரம் மேம்படுவதற்கு வாய்ப்புண்டு. பனை அறுவடைக்கு வரும்பொழுது பல வகை மதிப்புக் கூட்டுப் பொருட்கள் உற்பத்தியாகும்.

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

/உண்மை நகல்/

7.12.21
பிரிவு அலுவலர்
7.12.21
4/8